★ பழுதடைந்த மழைநீர் கால்வாய்கள் சீரமைப்பு
★ அடையாறு, கூவம் ஆற்றில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றம்
★ காய்ச்சலை தடுக்க சிறப்பு மருத்துவ முகாம்கள்

22 சுரங்கப்பாதைகளில் தண்ணீரை வெளியேற்ற தயார் நிலையில் பம்ப் செட்டுகள்

# பருவமழையை சமாளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## நகராட்சி நிர்வாக செயலாளர் ஹர்மந்தர் சிங் அறிவிப்பு

சென்னை, அக். 25–

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் குறித்த அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் ஹர்மந்தர் சிங், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் தா.கார்த்திகேயன் தலைமையில் நேற்று ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.



ஆய்வுக்கூட்டத்தின்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் ஹர்மந்தர் சிங் தெரிவித்ததாவது:

ஏடிஸ் கொசுக்கள் உருவாக காரணமாக உள்ள தேவையற்ற பொருட்களான டயர், தேங்காய் ஓடுகள், தண்ணீர் தொட்டிகள், ஆட்டுக்கல், உரல், மூடப்படாத டிரம்கள், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், உடைந்த வாகன உதிரிப் பாகங்கள், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் ஆகியவற்றில் தேங்கும் மழைநீரை உடனடியாக அகற்றிட வேண்டும்.

அதன் மூலம் உற்பத்தியாகும் கொசுப்புழுக்கள் குறித்தும், அதன் வாழ்க்கை சுழற்சி முறை குறித்தும் எடுத்துக் கூறி அதனைத் தடுத்திடும் முறைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், காய்ச்சல் கண்டறியப்பட்ட இடங்களில் அதிகப்படியான மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

### குடிநீர் சோதனை

சுழற்சிமுறையில் தொடர்ச்சியாக குடிநீரை பரிசோதனை செய்திடவும், அம்மா உணவகங்கள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள், ரெயில் நிலையங்கள் ஆகியவற்றில் மருத்துவ முகாம்கள் நடத்தி இலவசமாக நிலவேம்பு குடிநீர் வழங்கிட வேண்டும்

மேலும் வடகிழக்கு பருவமழையின் போது, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அதிக மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து தேவையான இடங்களில் அதிக குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் இருப்பு வைத்திடவும், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இடங்களில், விரைவாக பணிகள் முடிக்கப்பட்டு, தண்ணீர் தடையில்லாமல் செல்கின்ற வகையில் இணைப்புகள் ஏற்படுத்திடவும் வேண்டும்.

### விழுந்த மரங்களை உடனுக்குடன் அகற்றுங்கள்

மழைக்காலங்களில் பல்வேறு விதமான சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அவைகளிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்திடவும், சாலைகளில் விழும் மரங்களை போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் உடனுக்குடன் அகற்ற வாகனங்கள் மற்றும் மரஅறுவை யந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மழை வெள்ளம் சூழும் பகுதிகளை கண்டறிந்து அப்பகுதி மக்களை பாதுகாப்பாக தங்க வைத்திட இடங்களை தயார் செய்யவும், உணவு தயாரிப்பு மையங்களை சுத்தப்படுத்தி, எரிபொருள், பாத்திரங்கள் போன்ற உபகரணங்களுடன் சமையல் செய்வதற்கு தயார் நிலையில் வைத்திருக்கவும், அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.

### கட்டுப்பாட்டு அறை

கட்டுப்பாட்டு அறையில் உள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1913 மூலமும், 044 – 2536 7823, 2538 4965, 2538 3694 மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், கட்டுப்பாட்டு அறையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மின்சார வாரியம், பெருநகர சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்கள் இடம் பெறவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் வசமுள்ள 1096 வாக்கி டாக்கிகள் மூலம் தகவல் தொடர்பினை பரிமாறிக் கொள்ளவும், தெரு மின்விளக்குக் கம்பங்களில் உரிய வடிவமைப்புகளுடன் கேபிள் ஒயர்களை பொருத்திட வேண்டும்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் உள்ள 219 நீரேற்று நிலையங்களும் இயங்கும் வகையில் தயார் நிலையில் இருக்கவும், நிவாரண மையங்களுக்கு தேவையான தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையம் தினமும் காலை, மாலை நேரங்களில் மழையளவினை தெரிவித்து உடனுக்குடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும், 24/7 மணிநேர வானிலை முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் மற்றும் உடனுக்குடனான புயல் எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிடவும், பொது சுகாதாரத்துறை, மருத்துவத்துறை மூலம் போதுமான தகுந்த நோய் தடுப்பு மருந்துகளை இருப்பு வைத்திடவும், ஆம்புலன்ஸ் மற்றும் காலரா எதிர்ப்பு மருந்துகளை முன் கூட்டியே தயார் நிலையில் வைத்திடவும், முன்னாள் ராணுவ வீரர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரெட் கிராஸ் சொசைட்டி மூலம் வெள்ளம் பாதிக்கும் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் தயார் நிலையில் இருந்திடவும் வேண்டும்.

### படகுகள், நீச்சல் வீரர்கள்

ஆவின் நிறுவனம் மூலம் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு பால் பொருட்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாக்கெட்டுகள் வழங்க தயார் நிலையில் இருக்கவும், தமிழ்நாடு மீன்வளத்துறை மூலமாக தகுதி வாய்ந்த நீச்சல் வீரர்கள், படகுகள், பைபர் படகுகள் மற்றும் கட்டுமரங்களை வைத்திருப்பவர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களை தயார் நிலையில் வைத்திருந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினர்களுக்கு தேவைப்படும்பொழுது வழங்கிட வேண்டும் எனவும், தமிழ்நாடு மின்சார வாரியம் மழைக்காலங்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சீர்செய்திட 24 மணிநேரமும் இயங்கும் குழுக்களை ஏற்படுத்தி பணியாற்றிடவும், தாழ்வான பகுதிகளில் உள்ள மின்ஒயர்களை உயரமான இடத்தில் அமைத்திடவும் வேண்டும்.

### மழை நீர் வடிகால்கள்

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள பொதுமக்களை மாற்றிடங்களுக்கு கொண்டு செல்லவும், உணவு பொட்டலங்களை எடுத்து செல்லவும் பேருந்துகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும், காவல்துறையினர் நிவாரண பணிகளின் போது உதவி புரிதல், முக்கியமான இடங்கள் மற்றும் உரிய அலுவலர்களின் அறைகளில் கம்பியில்லா தகவல் தொடர்பு ஏற்படுத்திடவும், மழைக்காலத்தில் தண்ணீர் தேக்கமடையும் சாலைகளின் விவரங்களை போக்குவரத்து காவல்துறையினர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

நெடுஞ்சாலைத்துறை மூலம் அனைத்து மழைநீர் வடிகால் கால்வாய்களை தூர்வாரி, நீர் செல்லும் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள், முட்புதர்களை அகற்றிடவும், தேவையான அளவு மணல் மூட்டைகள், சிமெண்ட் கலவை தடுப்புகள் தயார் நிலையில் வைத்திடவும், பாலத்தின் அடியில் உள்ள மண்திட்டுகளை அகற்றி மழைநீர் செல்ல வழிவகை செய்திட வேண்டும் என அனைத்துத் துறை அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

### டெங்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளை 2035 சிறு வட்டங்களாக பிரித்து டெங்கு மற்றும் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் 18000க்கும் மேற்பட்ட துப்புரவு, சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்கள் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் எனவும், தங்களது இல்லங்கள், வணிக வளாகங்களில் உபயோகமற்ற பொருட்களை அப்புறப்படுத்திட வேண்டும் என இரண்டு முறை அறிவிப்பு வழங்கியும், அதனைப் பொருட்படுத்தாமல் மழைநீர் தேங்கும் வகையிலும், கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் வகையிலும் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் கட்டடங்கள் கணக்கெடுக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு உபயோகமற்ற பொருட்கள் அகற்றப்பட்டு வருகிறது.

### 9964 கட்டட உரிமையாளர்களுக்கு நோட்டீஸ்

அதன்படி, 348 மருத்துவமனைகள், 1727 நிறுவனங்கள், 1786 புதிய கட்டுமானப் பணி நடைபெறும் இடங்கள், 1272 வணிக கட்டடங்கள், 789 அரசு கட்டடங்கள் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், 9964 கட்டட உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு, ரூ.25 லட்சத்து 76 ஆயிரத்து 800 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 9247 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 4 லட்சத்து 61 ஆயிரத்து 643 நபர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இதில், 6998 நபர்களுக்கு காய்ச்சல் இருப்பதாக கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 164 நபர்கள் உயர் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு மருத்துவக் குழுக்கள் மூலம் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் டெங்கு மற்றும் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. முன்னெச்சரிக்கை

### நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 1894 கி.மீ. நீளத்தில் 7351 எண்ணிக்கையில் மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு இரண்டு முறை தூர்வாரப்படுகிறது. தற்பொழுது, 1204 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.31 கோடி மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. பழுதடைந்த மழைநீர் வடிகால்வாய்கள் ரூ.7.43 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகிறது. விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் 376 கி.மீ. நீளத்திற்கு கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய்களில் 299 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூவம் ஆற்றில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள 14,257 வீடுகளில் 825 வீடுகளும், அடையாறு ஆற்றில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள 9,687 வீடுகளில் 4,134 வீடுகளும் அகற்றப்பட்டு அவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்பட்டுள்ளது.

கொடுங்கையூர் கேப்டன் காட்டன் மற்றும் பி கேனால் கால்வாய் பகுதிகளில் ஆம்பிபியன் யந்திரத்தின் மூலமும், குறுகிய மற்றும் சிறிய கால்வாய்களில் ரோபொடிக் யந்திரம் மூலமும், ஆகாயத்தாமரைகள் அகற்றப்பட்டு மழைநீர் எளிதாக வெளியேற வழிவகை செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி வசமுள்ள 16 சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலைத்துறை வசமுள்ள 6 சுரங்கப்பாதைகள் என மொத்தம் 22 சுரங்கப்பாதைகள் மற்றும் தண்ணீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களில் 60 உயர்அழுத்த டீசல் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டு தடையில்லா போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2 வாகனம் மூலம் மரம் அறுக்கும் யந்திரங்கள், 160 கையில் எடுத்துச் செல்லக்கூடிய டீசல், பெட்ரோலினால் இயங்கும் மர அறுவை யந்திரங்கள், 11 மின் அறுவை யந்திரங்கள் போன்றவைகளை மண்டல அலுவலகங்களில் இருப்பு வைத்து மழைக்காலங்களில் மரங்கள் சாலைகளில் விழும் பொழுது உடனுக்குடன் அகற்றி போக்குவரத்தை சீர்செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### மருத்துவ முகாம்கள்

இரவு நேரங்களில் மீட்பு பணிகளில் ஈடுபட 18 உயர்கோபுர மின்விளக்குகளை தயார்நிலையில் வைத்திடவும், 138 நகர ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் மருத்துவ முகாம்கள் நடத்திடவும், மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திட 3337 மலேரியா பணியாளர்கள் மூலம் கொசுஒழிப்பு பணி மேற்கொள்ள 420 கொசு மருந்து அடிக்கும் கைத்தெளிப்பான்கள், 245 கையினால் புகை பரப்பும் இயந்திரங்கள், 41 வாகனம் மூலம் புகை பரப்பும் யந்திரங்கள் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மழைநீர் பெருகும் தாழ்வான பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களை மீட்க 109 மீட்புப் படகுகளும், மீட்கப்பட்ட பொதுமக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்திட 176 நிவாரண முகாம்களும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களுக்கு உணவு தயாரித்திட 4 பொது சமையல் கூடங்களும், வாகனங்கள் மூலம் சென்று பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்திட 44 குழுக்களும், 50 அம்மா குடிநீர் மையங்கள் மூலம் மழைக்காலங்களில் பாதுகாப்பான தரமான குடிநீரை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், துணை ஆணையாளர் (வருவாய் மற்றும் நிதி) ஆர்.லலிதா, துணை ஆணையாளர் (பணிகள்) எம்.கோவிந்த ராவ், துணை ஆணையர் (சுகாதாரம்) எம். விஜயலட்சுமி, துணை ஆணையாளர் (கல்வி) மகேஸ்வரி ரவிக்குமார், தெற்கு வட்டார துணை ஆணையர் கோபால சுந்தர ராஜ் உட்பட உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பிறப்பு – இறப்பு சான்றிதழ் பெற தமிழகம் முழுவதும் ஆன்–லைன் வசதி: அரசாணை வெளியீடு

சென்னை, அக். 25–

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெறுவதற்கு, தமிழகம் முழுவதும் ஆன்–லைன் வசதி ஏற்படுத்துவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சுகாதாரத் துறை முதன்மைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:–

சென்னை மாநகராட்சி, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழை ஆன்லைன் மூலம் வழங்கி வருகிறது. இதேபோல், தமிழகம் முழுவதும் ஆன்லைன் மூலம் இந்த சான்றிதழ்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஆன்லைனில் இந்த சான்றிதழ்கள் இலவசமாக பதிவிறக்கம் செய்வதற்கான தொழில்நுட்ப ஏற்பாடுகளைச் செய்வதற்கு பிறப்பு, இறப்பு தலைமைப் பதிவாளருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஊரகப் பகுதிகளில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தாலுகா அல்லது தாலுகா நிலை அல்லாத மருத்துவமனைகள் ஆகியவற்றுக்கு பல்நோக்கு சுகாதார கண்காணிப்பாளர்களை (ஆண்கள், முன்னாள் சுகாதார ஆய்வாளர்கள்) பிறப்பு, இறப்பு ஆய்வாளர்களாக நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், நகர்ப்புற மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள சுகாதார ஆய்வாளர்கள் அல்லது செயல் அதிகாரிகளை அங்குள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், தாலுகா அல்லது தாலுகா நிலை அல்லாத மருத்துவமனைகள் ஆகியவற்றின் பிறப்பு, இறப்பு பதிவாளர்களாக நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

தமிழ்நாடு பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டத்தில் கட்டணம் தொடர்பான விதிகளில் திருத்தங்களை அரசு மேற்கொண்டுள்ளது. அதன்படி, ஓராண்டு வரைக்கும் பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்பை பதிவு செய்வதற்கான கட்டணம் ரூ.2 லிருந்து ரூ.100 ஆக மாற்றப்படுகிறது.

ஓராண்டுக்கும் மேலாக பதிவு செய்யப்படவில்லை என்றால் அதைப் பதிவு செய்வதற்கான கட்டணம் ரூ.5 லிருந்து ரூ.200 ஆக உயர்த்தப்படுகிறது. அப்படி பதிவு செய்த பிறகு பதிவுச் சான்றிதழை வாங்குவதற்கான கட்டணம் ரூ.10 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படுகிறது. சான்றிதழுக்கு கூடுதல் நகல் தேவைப்பட்டால் ஒவ்வொரு நகலுக்கும் ரூ.200 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொலைதூர உணர் திறன் செயற்கைகோள்

# ‘கார்ட்டோ சாட்’, 30 நானோ செயற்கைகோள்கள் டிசம்பரில் விண்ணில் ஏவப்படும்

## இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் கே.சிவன் தகவல்

சென்னை, அக்.25

தொலைதூர உணர் திறன் செயற்கைகோள் ‘கார்ட்டோ சாட்’ மற்றும் 30 நானோ செயற்கைகோள்கள் டிசம்பர் மாதம் விண்ணில் ஏவப்படுகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானி டாக்டர் கே.சிவன் கூறினார்.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 31ந்தேதி பி.எஸ்.எல்.வி. சி39 ராக்கெட் மூலம் ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1எச் செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால் அந்த செயற்கைகோளின் வெப்பத்தகடு சரியாக செயல்படாததால் அது தோல்வியில் முடிந்தது.

தற்போது மீண்டும் டிசம்பர் மாதம் செயற்கைகோளை விண்ணில் செலுத்தும் பணியில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதுகுறித்து இஸ்ரோவின் கீழ் செயல்படும் திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மைய இயக்குனர் விஞ்ஞானி டாக்டர் கே.சிவன் கூறும்போது, ‘டிசம்பர் மாதம் முதல் தொடர்ச்சியாக செயற்கைகோள்களை விண்ணில் செலுத்துவதற்கான பணியில் இஸ்ரோ ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக டிசம்பர் 2ம் வாரத்தில் வெளிநாடுகளை சேர்ந்த 30 நானோ செயற்கைகோள்களுடன், தொலைதூர உணர்திறன் செயற்கைகோளான இந்தியாவின் ‘கார்ட்டோ சாட்’ செயற்கைகோளும் விண்ணில் செலுத்தப்பட உள்ளது’ என்றார்.

இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது:

தோல்வியடைந்த ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1ஏ செயற்கைகோளுக்கு மாற்றாக விண்ணில் வேறொரு செயற்கைகோள் செலுத்தப்பட இருக்கிறது. இதற்கான பணிகள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஏவப்பட உள்ள சந்திராயன் 2 உள்பட 3 ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்துவதற்கான பணிகளும் நடந்துவருகிறது.

‘கார்ட்டோசாட்’ செயற்கைகோளை பொறுத்தவரையில், வரைபடங்கள் தயாரிக்கவும், நகர்ப்புற, கிராமப்புற, கடலோர நில பயன்பாடு, சாலை அமைக்கும் பணி கண்காணிப்பு, நீர் விநியோகம், புவியியல் தகவல் அமைப்பு, ராணுவ பணிகள் ஆகிய பயன்பாடுகளுக்கு உதவும்.

அதோடு கட்டுமான பணியை மதிப்பீடு செய்யவும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட வேலைகளை கண்காணிக்கவும், நகர திட்டமிடல் மற்றும் மணல் குவாரி கண்காணிப்பு ஆகிய பணிகளுக்கும் உதவும்.

இவ்வாறு விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில், தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வெள்ளத் தடுப்பு பணிகள் குறித்து பொதுப்பணித்துறையின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், நீர்வள ஆதாரத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர், மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

equitas

EQUITAS HOLDINGS LIMITED
CIN: L65100TN2007PLC064069
Regd. Office: 410A, 4th Floor, Spencer Plaza, Phase II, No.769, Mount Road, Anna Salai, Chennai-600002
Tel: 044-4299 5000 | Fax: 044-4299 5050
www.equitas.in | Email: secretarial@equitas.in

NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE

NOTICE is hereby given that the following share certificate issued by the Company registered in the name of person specified herein is reported to have been lost.

| Folio No. | Registered Holder | Share Certificate No. | No. of shares | Distinctive Numbers From | Distinctive Numbers To |
|---|---|---|---|---|---|
| EMF0001019 | Mathiyalagan R | 919 | 1152 | 32676657 | 32677808 |

The Company shall proceed to issue duplicate share certificate in favour of the above shareholder in lieu of the original share certificate, in the absence of any objection with evidence lodged within 7 days of publication of this notice to the undersigned, from any person claiming any interest, right or title to the shares specified above. The Company shall not entertain any claim thereafter. Any person dealing with the aforesaid shares will be doing so at his/her own risk.

For Equitas Holdings Limited,
sd/-
Place: Chennai
Date: October 25, 2017
Mrs. Jayashree S Iyer, Company Secretary

Butterfly
Good for a lifetime

பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 143, புதுப்பாக்கம் கிராமம், வண்டலூர் - கேளம்பாக்கம் ரோடு, கேளம்பாக்கம் - 603 103, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு
Website: www.butterflyindia.com; email:ramki.ks@butterflyindia.com;
CIN: L28931TN1986PLC012728

அறிவிப்பு

செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015–ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30.09.2017ல் முடிந்த இரண்டாவது காலாண்டு/அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்கிழமை, 7 நவம்பர் 2017 அன்று காலை 11.30 மணிக்கு கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம், E-34, 2வது தளம், ராஜீவ் காந்தி சாலை, ஏகாட்டூர் கிராமம், நாவலூர் - 600 130, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு என்ற முகவரியில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பின் நகல் கம்பெனியின் இணையதளம் www.butterflyindia.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் பார்வையிடலாம்.

பட்டர்பிளை காந்திமதி அப்ளையன்சஸ் லிமிடெட்டுக்காக
இடம்: நாவலூர் - 600 130
தேதி : 25.10.2017
K.S. ராமகிருஷ்ணன்
கம்பெனி செயலாளர் & பொது மேலாளர் (சட்டம்)